**நீதித்துறை நடுவர் எண்.II, உசிலம்பட்டி**

DEPOSITION OF WITNESS – Crl.Misc.39

(Chapter XXIII Code of Criminal Procedure)

Calander Case No.77/2019

Deposition of witness for Petitioner : PW8

பெயர் : முருகராஜா

நாள் : 07.04.2026

நேரம் : பிற்பகல் 3.45

சாட்சி விசாரணையைக் காணொளி மூலம் நடத்துவதற்கு அரசு தரப்பில் மனு தாக்கல் செய்து எதிரி தரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டதன் அடிப்படையில் சாட்சி காணொளி மூலம் வரவழைக்கப்பட்டுள்ளார். எதிரி தரப்பு வழக்கறிஞரும் உள்ளார். சாட்சி **சேலம் மாவட்ட நீதிமன்ற** வளாகத்தில் உள்ள காணொளி அரங்கத்தில் அமர வைக்கப்பட்டு சாட்சி காணொளி மூலம் நீதிமன்றத்திலுள்ள திரையில் இணைக்கப்பட்டுள்ளார். சாட்சியின் அருகில் காணொளி மூலம் விசாரணை செய்வதற்கு **உதவியாக உள்ளவர் யசோமதி, சேலம் மகிளா நீதிமன்றத்தில் மொழிபெயர்பாளர்** பணியில் உள்ளார். சாட்சி உசிலம்பட்டி நீதித்துறை நடுவர் எண்.II, இளநிலை உதவியாளர் **திருமதி.பிரியா** என்பவர் சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். சாட்சியின் அருகே வேறு யாரும் இல்லை என உறுதிபடுத்தப்பட்டு சாட்சியின் அடையாளமும் உறுதிபடுத்தப்பட்ட பின் விசாரணை தொடர அனுமதிக்கப்பட்டது.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7ம் நாள் அரசு தரப்பு சாட்சியாகிய முருகராஜா என்பவரின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டப்பிரிவு 10ன்படி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. முருகராஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | பரமன் |
| தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | அம்மாப்பேட்டை |
| தாலுகா | : | சேலம் |
| வயது | : | 45/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.04.2026(எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல்விசாரணை :**

நான் தற்போது காவல் ஆய்வாளராக அம்மாபேட்டை காவல் நிலையத்தில் பணியாற்றி வருகிறேன். கடந்த 02.04.2018ம் தேதி 13.00 மணிக்கு செக்காணூரணி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராகப் பொறுப்பில் இருந்த போது மதுரை மாவட்டம், திருமங்கலம் தாலுகா, செக்காணூரணி மதுரை மெயின் ரோட்டில் வசிக்கும் செல்லப்பா மனைவி அன்னக்கொடி என்பவர் மதுரை மாவட்ட கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்து காவல் நிலையத்திற்கு வரப்பெற்ற தகவலை பெற்று அதன் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண் 120/2018 பிரிவுகள் 406,420,294(b) இதசவாக வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கை அசலையும் புகாரையும் சேர்த்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி வழக்கானது காவல் ஆய்வாளர் அவர்களால் விசாரிக்கப்பட வேண்டியது என்பதால் வழக்கு கோப்பினை காவல்ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** ;

புகார் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் குற்ற நிகழ்வு நாள் 18.08.2014 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு 02.04.2018ம் தேதி தகவல் கிடைத்தது என்றால் சரிதான். நான்கு ஆண்டுகளுக்கான கால தாமதம் குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. இவ்வழக்கின் 1வது எதிரி புகார்தாரரை எந்த தேதியில் சந்தித்து அரசு வேலை வாங்கி தருவதாக புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் எந்த கிளையில் வேலை வாங்கி தருவதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லப்படவில்லை. புகார்தாரர் நிலத்தை அடகுவைத்து பணம் கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணங்கள் எதுவும் புகாருடன் தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடம் அரை கிலோ மீட்டர் தூரம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு ஐந்து நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் 10 நிமிடத்தில் வந்துவிடலாம். மதுரைக்கு செல்ல வேண்டும் என்றால் பேருந்து நிலையம் காவல்

நிலையத்திற்கு முன்பே தான் உள்ளது என்றால்சரிதான். புகார்தாரர் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் குடும்ப பிரச்சனையை மனதில்வைத்துக்கொண்டு கொடுத்தபுகாரை நான் சரியாக விசாரணை செய்யாமல் காவல் துறை கண்காணிப்பாளரிடமிருந்து மனு விசாரணைக்கு வந்ததால் அப்படியே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

| | | |
|---|---|---|
| Co oridinator | | Tmt. Priya, Junior Assistant |
| Remote site | Deponent | Judicial Magistrte No.II, Usilampatti |

SATHIA NARAYANAN

Digitally signed by SATHIA NARAYANAN
Date: 2026.04.08 17:13:58 +0530